துணை முதலமைச்சர் அவர்கள் 16.09.2025 அன்று சேலம், கருப்பூர், அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு சுமார் ரூ.3,500 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்புகள் மற்றும் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம் / மாநகராட்சி, கற்பக விநாயகா மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் கலந்துகொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளுக்கான காசோலைகள் மற்றும் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில் , சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் , மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ஊ.பாலசுந்தரம், வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட செயல் அலுவலர் கே.செல்வம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு என்ற தீர்மானத்தை மக்களிடையே வலியுறுத்தும் நோக்கத்தில், சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளாண்டிவளசு பகுதியில் மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்று, பல்லாயிரக்கணக்கான மக்களின் மத்தியில் உறுதிமொழி ஏற்றதுடன், தீர்மானத்தின் பின்னணி, அவசியம் மற்றும் அதன் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் அரசியல் சூழ்நிலையிலும், தமிழர்களின் உரிமைகளை குறித்து சிறப்புரையாற்றினர். இந்த நிகழ்வில், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் தொகுதிப் பார்வையாளர்கள் முருகவேல், செந்தில்குமார், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்று நிகழ்வை சிறப்பித்தனர்.

என்.கௌதமன் தலைமை! தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் –

நாகையில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு கூட்டம்!

சிவாஜி.கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை!

நாகை, செப். 22 -

நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டின் மண் மொழிமானம் காக்க கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, தமிழ் நாடு முழுவதும் 68 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களால் முன்மொழியப்பட்டுள்ள தமிர் நாட்டை தலைகுனிய விட மாட்டோன் என்ற தீர்மான ஏற்புக் கூட்டம் பொதுக்கூட்டமாக நாகை அவுரித்திடலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் தலைமை தாங்கினார். நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து வரவேற்றார். முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், கழக விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், கழக தீர்மானக் குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், தொகுதி பார்வையாளர்களான மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் வீ.ஜெய பிரகாஷ், மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், க.மறைமலை, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர் கற்பகம்நீலமேகம், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி.கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், தலைமைக் கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், மகா.குமார், கே.பழனியப்பன், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சிக்கல் என்.ஆனந்த், சோ.பா.மலர்வண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ்.பி.டி.சார்லஸ், கே.பாண்டியன், எல்.எஸ்.ஈ.பழனியப்பன், இல.பழனிய ப்பன், கோ.சிவக்குமார், எஸ்.பன்னிர்செல்வம், உமாசெந்தாமரைசெல்வன், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சய லிங்கம், சி.சுப்பரமணியன், சே.மரிய சார்லஸ், எஸ்.முகமதுசுல்தான், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, ப.உதயக்குமார், இரா.முருகையன், ஆர்.துரைராஜ், கேஸ் வி.செந்தில், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, அ.பாரிபாலன், பி.முருகானந்தம், கே.எஸ்.சாகுல்ஹமீது, எஸ்.பால்ராஜ், ஆர்.ஆர்.குலோத்துங்கன், க.சத்தியமூர்த்தி, த.தமயந்தி, எஸ்.புவனேஷ்வரி,எஸ்.சந்தோஷ், இளம்.சுந்தர், ஆர்.சுரேந்தர், வி.கமல், எஸ்.வெற்றிச்செல்வன்,எஸ்.பாலமுரளி, எஸ்.பால்ராஜ், அருள் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், நகர் மன்ற, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர். முடிவில் நாகை நகர துணைச் செயலாளர் வெற்றிலைகடை ஜி.சிவா நன்றி கூறினார்.

கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் "ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் சித்தாபுதூர் வி.கே.கே.மேனன் சாலையில் மாவட்டச் செயலாளர் சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தலைமையில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன் முன்னிலையில், பகுதி பொறுப்பாளர் மா.நாகராஜ் வரவேற்புரையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர், கழக சட்டத்துறை இணை செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான் சிறப்புரையாற்றினார். தலைமைக் கழகப் பேச்சாளர் கோவை சம்பத் உரையாற்றினார். இதில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் உள்பட தலைமைக் கழக நிர்வாகிகள், பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாரின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி கீரமங்கலம் பேரூராட்சி பேருந்து நிலையம் அருகில், தலைமை கழகம் அறிவுறுத்தல்படி, புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகம் சார்பில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையிலும், அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் முன்னிலையிலும் நடைபெற்ற தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்! 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்பு பொதுக்கூட்டத்தில் முனைவர் முன்னாள் துணைவேந்தர் சபாபதி மோகன் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்று குழுமியிருந்த மக்களிடையே சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணா த்துரை, ஆர்.ஆர்.கே.கலைமணி, இரா.ஆனந்த், உதயம் சண்முகம், சக்தி ராமசாமி, பொன்.கணேசன், வே.பொன்துரை, கே.பி.கே.டி.தங்கமணி, கே.எஸ்.ரவி, கே.சி.சிவக்குமார், த.மணிராஜன், வீரய்யா, ஆர்.வி.செல்வம், கே.எம்.சுப்பிரமணியன் மற்றும் மாநிலமாவட்டஒன்றியபேரூர் நகரஊராட்சி கழக கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அனைத்து பொது போக்குவரத்துகளையும் இணைக்கும் வகையில்

ஒரே டிக்கெட்டில் பயணம் செய்யும் 'சென்னை ஒன்' செயலி திட்டம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

சென்னை, செப்.22 -

சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பின் (CUMTA) சார்பில் இந்தியாவிலேயே முதன்முறையாக பேருந்து, புறநகர் ரயில், மெட்ரோ ரயில் மற்றும் கேப் / ஆட்டோக்கள் போன்ற அனைத்து பொது போக்குவரத்துகளையும் இணைக்கும் வகையில் ஒரே QR பயணச்சீட்டு மூலம் ஐ.ஓ.எஸ் மற்றும் ஆண்ட்ராய்டு தளங்களில் செயல்படக் கூடிய "சென்னை ஒன்று மொபைல் செயலி" யை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (22.9.2025) தொடங்கி வைக்கிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பின் (CUMTA) 2வது ஆணையக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சென்னைப் பெருநகரப் பகுதிக்கான 25 ஆண்டுகளுக்கான போக்கு வரத்து திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பதுடன் சென்னை பெருநகருக்கான ஒருங்கிணைந்த QR (Quick Response) பயணச்சீட்டு மற்றும் பயணத் திட்டமிடல் செயலியை இன்று (22.9.2025) தொடங்கி வைக்கவுள்ளார்.

சென்னைப் பெருநகரப் பகுதிக்கான (5,904 சதுர கி.மீ) விரிவான போக்குவரத்து திட்டம் (Comprehensive Mobility Plan) 2023-2048, "மக்களும் பொருட்களும் தங்கு தடையின்றி ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதை உறுதி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த, நிலையான, பாதுகாப்பான மற்றும் நெகிழ்வான போக்குவரத்து சுற்றுச்சூழல் அமைப்பை ஏற்படுத்துதல்" என்ற தொலைநோக்குப் பார்வையுடன், நகர்ப்புற போக்குவரத்து முயற்சிகளை முன்னெடுத்து செல்வதற்காக அமைகிறது.

விரிவான போக்குவரத்து திட்டம் மூலம் பயண நேரத்தை மற்றும் பயண செலவைக் குறைத்தல், நம்பகமான, விரைவான பொதுப் போக்குவரத்தை வழங்குதல், பல்வகை பொது போக்குவரத்தை ஒருங்கிணைத்து வலுப்படுத்துதல், குறைந்த போக்குவரத்து உமிழ்வு மற்றும் பயணத் தேவை மேலாண்மையை ஊக்குவித்தல் போன்றவை கண்காணிக்கப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக அனைத்து பொது போக்குவரத்தையும் இணைக்கும் வகையில் ஐ.ஓ.எஸ் மற்றும் ஆண்ட்ராய்டு தளங்களில் செயல்படக்கூடிய "சென்னை ஒன்று (CHENNAI ONE) மொபைல் செயலியை" முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (22.9.2025) தொடங்கி வைக்கிறார்.

இந்த செயலி பேருந்து, புறநகர் ரயில், மெட்ரோ ரயில் மற்றும் கேப் / ஆட்டோக்களை ஒரே QR பயணச்சீட்டு மூலம் ஒருங்கிணைக்கிறது.

இதன்மூலம் பொதுமக்கள் பேருந்துகள், மெட்ரோ மற்றும் புறநகர் ரயில்களின் நிகழ்நேர இயக்கத்தை அறிந்து கொள்ளவும், UPI அல்லது கட்டண அட்டைகள் வழியாக பயணச் சீட்டுகளை பெற்றிடவும்,

ஒரே பயணப் பதிவின் மூலம் அனைத்து போக்குவரத்து முறைகளிலும் பயணம் செய்யவும் முடியும். இச்செயலி ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம் என பல மொழிகளில் மக்கள் பயன்படுத்திடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

"சென்னை ஒன்று செயலி" பொது போக்குவரத்து சேவையில் ஒரு முக்கியமான முன்னெடுப்பாகும். இனி பொதுமக்கள் பயணச் சீட்டு பெற வரிசையில் காத்திருக்க தேவையில்லை. இந்த செயலி மூலம் எளிதாக கட்டணம் செலுத்தி பயணச்சீட்டை பெற்று பயணம் செய்யலாம்.

திருப்பூர் மத்திய மாவட்டம் தெற்கு மாநகரம் கொங்கணகிரி பகுதி சார்பில் "ஓரணியில் தமிழ்நாடு விளக்க பொதுக்கூட்டம் வளையங்காடு, வ.உ.சி நகர், மெயின் ரோடு, சுப்பராயகவுண்டர் மண்டபம் அருகில் திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டிகேடி மு.நாகராசன், பகுதி பொறுப்பாளர் க.ஈஸ்வரமூர்த்தி முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர், மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். இதில் , திருப்பூர் மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாநகரப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், தெற்கு சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ப.ராம்குட்டி (எ) ராமமூர்த்தி உள்பட மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.